# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 28. கட்டுமானத் தளங்கள்

**விளக்கம்** – இவை நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தொழிலாளர்கள் வந்து கட்டுமானங்கள் தொடர்பிலான வெவ்வேறு பணிகளில் ஈடுபடும் தலங்கள் ஆகும். அவர்களில் பெரும்பாலோர் கட்டுமான தலங்களில் பல மாதங்கள் தங்கியிருப்பார்கள்.

**பிரத்தியேக வழிகாட்டல்கள்**

**வேலை வழங்குனர்கள்**

- போதுமான பாதுகாப்பு சாதன வழங்கல்கள் கையிருப்பில் இருக்க வேண்டும் (உதாரணம் : முகக்கவசங்கள், வெப்பமானிகள் (பாரிய கட்டுமானத் தலங்களில்), தொற்றுநீக்கிகள், சவர்க்காரம் மற்றும் நீர் வழங்கல்).
- தொழிலாளர்களின் எண்ணிக்கையை முடிந்தவரை குறைவாகப் பேணுங்கள்.
- தொழிலாளர்களது வதிவிடம் குறித்துச் சரிபார்ப்பதுடன் அவர்களது தொடர்பு விவரங்களின் பட்டியலைப் பேணவும்.
- நுழைவாயிலில் உடல் வெப்பநிலை மற்றும் சுவாசநோய் அறிகுறிகளை முன்னாய்வு செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள் அல்லது நோய் அறிகுறிகளைக் கேட்டு அவர்களது உடல் ஆரோக்கியத்தை சரிபார்க்கவும்.
- இயலுமாயின், தற்காலிக தங்குமிடங்களை காற்றோட்டத்துடன் ஏற்பாடு செய்யுங்கள்.
- கை கருவிகள், உபகரணங்கள் மற்றும் மின் கருவிகள் என்பவற்றை பகிரப்படுவதை முடிந்தவரை குறைக்கவும்
- ஆரோக்கிய நடத்தைகள் குறித்து தொழிலாளர்களுக்கு அறிவுறுத்துங்கள்.
- சாத்தியமான சந்தர்ப்பங்களில் எல்லாம் நடவடிக்கைகளை ஆட்களுக்கு இடையில் போதுமான அளவு இடைவெளியுடன் மேற்கொள்ளுமாறு ஏற்பாடு செய்யும் அதேவேளை இது எப்போதும் சாத்தியமாகாது என்பதால் அவ்வாறு உடல் இடைவெளி பேணுவதற்குச் சாத்தியப்படாத சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர்கள் முகக்கவசம் அணிவதை உறுதியாக ஊக்குவிக்கவும்.
- கை கழுவுவதற்கு போதுமான வசதிகளை வழங்க நுழைவாயிலில் கை கழுவுவதற்கு சோப்புடன் கால்களால் இயக்கப்படும் / உணரி (sensor) ஊடாக இயக்கப்படும் நீர்த்தொட்டிகளை வழங்கவும்
- தொழிலாளர்களுக்கு சுவாச நோய் அறிகுறிகள் ஏற்படுகிறதா என்பது தொடர்பில் சரியாகக் காண்காணிக்கப்படுவதனை உறுதி செய்யுங்கள்
- மூடப்பட்ட முகாமைத்துவ (closed-off management) முறையினை நடைமுறைப்படுத்துதல். அதாவது பணியாளர்கள் எவரும் வேலைத்தலத்திலிருந்து வெளியேறாமலும், வெளிஆட்கள் உள்ளே வராமலும் கட்டுப்படுத்துக.
- தொழிலாளர்கள்□வெற்றிலை□மெல்லுவதில்லை□அல்லது□வளாகத்திற்குள்□புகைபிடிக்கவில்லை□என்பதை□உறுதிப்படுத்தவும்
- தளத்தில் போதுமான கழிப்பறை வசதிகளை ஏற்பாடு செய்து கழிப்பறைகளுக்கு வெளியே சிறுநீர் கழிப்பதைத் தவிர்க்கவும்
- மின்தூக்கி ஒன்று இருந்தால், பாதுகாப்பான தூரத்தை பராமரிக்க ஒரு நேரத்தில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையை குறைக்க தரையில் உள்ள இடங்களைக் குறிக்கவும்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாக உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**ஊழியர்கள்**

- சரியான விவரங்களை நிர்வாகத்திற்கு வழங்க வேண்டும்.
- வேலைத்தலத்தினுள் நுழைவதற்கு முன்னரும் /அங்கிருந்து வெளியேறும்போதும் ஆகக் குறைந்தது 20

வினாடிகளுக்கு சவர்க்காரம் மற்றும் தண்ணீர் உபயோகித்துக் கைகளைக் கழுவ வேண்டும். பணியில் ஈடுபடும்போதும் அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்ளல் வேண்டும்.

- எப்போதும் மற்றையவர்களில் இருந்து குறைந்தது ஒரு மீற்றர் உடல் இடைவெளியைப் பேண வேண்டும்.
- வாய், மூக்கு மற்றும் கண்களைத் தொடக்கூடாது.
- முகக்கவசங்களை சரியாக அணிய வேண்டும் மற்றும் அவற்றினை மூடி கொண்ட குப்பைத் தொட்டியினுள் மட்டுமே வீச வேண்டும்.
- உங்கள் கிண்ணங்கள், உணவருந்தும் தட்டங்கள், ஆடைகள் மற்றும் துவர்த்தும் துண்டுகளைப் பகிர்ந்து கொள்ளக்கூடாது.
- கட்டுமானத் தலத்திற்குள்ளேயோ அல்லது வெளியேயோ எந்த ஒரு ஒன்றுகூடல்களையும் ஒழுங்கு செய்யவோ அல்லது அல்லது பங்கேற்கவோ கூடாது.
- கட்டுமான தலத்தில் எச்சில் துப்பக்கூடாது.
- இருமும் போது அல்லது தும்மும் போது உங்களது வாய் மற்றும் மூக்கினை முழங்கையின் உட்பக்கத்தால் மறைத்துக் கொள்ள வேண்டும்.
- உங்களுக்கு சுவாச நோய் அறிகுறிகளான காய்ச்சல், மூக்கினால் நீர் வடிதல், தொண்டை நோவு அல்லது இருமல் ஆகிய ஏதேனும் இருந்தால், கட்டுமான தலத்துக்கு செல்லவேண்டாம்.

**அறிவுறுத்தும் முறைகள்**

- கட்டுமான தலத்தின் நுழைவாயிலில் / அனைத்துப் பணியாளர்களும் நன்கு பார்வையிடக்கூடிய இடங்களில் பதாகைகள் / சுவரொட்டிகள் ஆகியவற்றினைப் பயன்படுத்திச் சுகாதாரச் செய்திகளை காட்சிப்படுத்தலாம்.
- சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 'வேலைத்தளங்களில் கொரோனா வைரஸ் தீவிர நோய் பரவல் தொடர்பான தயார்ப்படுத்தல் மற்றும் பதில் நடவடிக்கைகள் குறித்த செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்' பிற்சேர்க்கையாக கட்டுமானத் தொழிற்துறையினருக்கான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தயவுசெய்து அதனையும் பார்வையிடுக.




**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020